குற்றவியல் நீதித்துறை நடுவர், நீதிமன்றம், ஓமலூர்.
முன்னிலை: திருமதி.S.ஷர்மிளா, B.A.B.L.(Hons.), L.L.M.
குற்றவியல் நீதித்துறை நடுவர், ஓமலூர்.
சி.சி.எண்.129/2012

அ.சா.5

2025–ம் ஆண்டு ஆகஸ்ட் 04–ம் தேதி திங்கள்கிழைமை அரசு தரப்பு சாட்சி 05–வது நபரின் வாக்குமூலம் (1969–ம் ஆண்டின் 54–வது விதியின் 9–வது பிரிவின் ஏற்பாட்டின் படி) திருமதி.மோகனபிரியா என்பவரின் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | லோகநாதன் | தொழில் | |
| தந்தை பெயர் | கிருஷ்ணன் | வயது | |
| கிராமம் | | தாலுக்கா | |

விசாரணை தொடங்கிய நேரம்: மதியம் 12.26 மணி,

Accused Panneer selvam present. Advocate Mr.Siddharthasankar present for Advocate Mr.Sreenivasan for accused. APP Mr.M.Suresh present.

**முதல் விசாரணை :**

1. நான் எம்.செட்டிப்பட்டியில் குடியிருந்து, ஓட்டுநர் வேலை செய்து வருகிறேன். இவ்வழக்கு சம்பவம் நடந்த காலக்கட்டத்தில் கல்லடா டிராவல்ஸ்ஸில் ஓட்டுநராக வேலை செய்து வந்தேன். அ.சா.4 கிருஷ்ணமூர்த்தி எங்களது நிறுவனத்தில் ஓட்டுநராக வேலை செய்து வந்தார்.

2. கடந்த 12.02.2012 ஆம் தேதி, அ.சா.4 கிருஷ்ணமூர்த்தி கல்லடா டிராவல்ஸ் பேருந்தினை திருவனந்தபுரத்தில் இருந்து, பெங்களூரு செல்லும் பேருந்தை, திருவனந்தபுரத்தில் இருந்து பெங்களூரு நோக்கி ஓட்டி வந்தார். வழக்கமாக சேலத்தில், மாற்று ஓட்டுநர் பணிக்கு வந்துவிடுவார். அன்றைய தினம் மாற்று ஓட்டுநராக வந்த, ஓட்டுநர் வேல்முருகன் என்பவர் எனக்கு போன் செய்து, பேருந்தில் திருடுபோய்விட்டதாகவும், அதற்கு புகார் அளிப்பதற்காகவும் ஓமலூர் காவல் நிலையத்தில் செல்வதற்கு வழிகாட்டுவதற்காக என்னை போனில் அழைத்தார்.

3. நான் அவர்களை ஓமலூர் காவல் நிலையத்திற்கு வழிகாட்டி அழைத்து வந்தேன். அதன்பின்பு, போலிசார் பேருந்தில் இருந்த பயணிகளை விசாரணை செய்து, சோதனை செய்தார்கள். பின்பு பேருந்தை அனுப்பி வைத்தார்கள். பேருந்தில்

S SHARMILA
Digitally signed by S SHARMILA
Date: 2025.08.04 17:52:21 +0530

வைத்திருந்த நகை திருடுபோனது சம்மந்தாக சொன்னார்கள். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை :**

4. நான், எம்.செட்டிப்பட்டியில் நிரந்தர குடியிருப்பு வைத்துள்ளேன் என்றால் சரி. கல்லடா பேருந்தில் திருவனந்தபுரத்தில் இருந்து, பெங்களுரு செல்லும்போது, சேலத்தில் மாற்று ஓட்டுநர் பேருந்தில் ஏறிக்கொள்வார் என்றால் சரி. சம்பவத்தன்று, மாற்று ஓட்டுநராக மேற்படி பேருந்தில் வந்த வேல்முருகன் விடியற்காலை 02.00 – 03.00 மணியளவில் எனக்கு போன் செய்து தகவல் கொடுத்தார்.

5. அ.சா.4 கிருஷ்ணமூர்த்தி எனக்கு தகவல் கொடுக்கவில்லை என்றால் சரி. நான், ஓமலூர் காவல் நிலையத்திற்கு வந்தபோது, அதிகாலை சுமார் 04.00 மணி இருக்கும். அப்போது, பேருந்தும், ஓமலூர் காவல் நிலையத்திற்கு வந்துவிட்டது. நான், ஓமலூர் காவல் நிலையத்திற்கு வருவதற்கு முன்பு, பேருந்து ஓமலூர் காவல் நிலையத்திற்கு வந்துவிட்டதா என்றால், பேருந்து பைபாஸ் ரோட்டில் வந்து கொண்டிருந்தபோது நான் ஓமலூர் அருகே வந்துவிட்டேன். நான், போன்மூலம் ஓட்டுநர் வேல்முருகனுக்கு வழி சொல்லிக்கொண்டே, ஓமலூர் காவல் நிலையம் வந்தேன், அவர்களும் அங்கே வந்துவிட்டார்கள்.

6. நகை காணாமல் போனதாக கூறிய நபர், ஓமலூர் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தார். இவ்வழக்கில் வேல்முருகன் அல்லது கிருஷ்ணமூர்த்தி புகார் கொடுக்கவில்லை என்றால் சரி. நான், ஓமலூர் காவல் நிலையத்தில் வைத்து பேருந்தை பார்த்தபோது, சுமார் 48 நபர்கள் பேருந்தில் இருந்தார்கள். ஓமலூர் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தபின்பு, ஓமலூரிலிருந்து காலை 10.00 மணிக்கு பேருந்து பெங்களுரு புறப்பட்டது.

7. பள்ளப்பட்டி காவல் நிலையத்தில், புகார் கொடுத்தது பற்றி, என்னிடம் யாரேனும் கூறினார்களா என்றால் இல்லை. நான் இதுபற்றி ஓமலூர் காவல் நிலையத்தில் கூறவில்லை என்றால் சரி.

**மறுவிசாரணை : இல்லை**

**விசாரணை முடிந்த நேரம் : மதியம் 12.40 மணி.**

S SHARMILA

Digitally signed by S SHARMILA
Date: 2025.08.04 17:52:26 +0530